26.11.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.116/2016**

**பி.வா.சா. 1–நாகராஜ், த/பெ.பழனியப்பன்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியும். நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண். 294/95 என்று சொன்னால் சரிதான். இந்த சர்வே எண்.294/95 சொத்தை நாகம்மையார் செட்டியாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.294/95 நான்கெல்லையாக நாடார் கோவில் வீட்டுவாசலுக்கு தெற்கு, நாடார் மாசிமலையான் கோவிலுக்கும் கிழக்கே என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மாசிமலையான் கோவில் நான் குடியிருக்கும் வீட்டிற்கு மேற்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். இந்த மாசிமலையான் கோவில் சர்வே எண்.294/94 நிலங்கள் கட்டுப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி அசோக்குமார் என்பவர் வீடு இந்த மாசிமலையான் கோவிலுக்கு மேற்கு

திசையில் உள்ளது என்றால் சரிதான். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வழக்கு ஆவணங்களில் நான்கெல்லை விவரத்தில் மாசிமலையான் கோவில் நான்கெல்லையாக குறிப்பிட்டு தான் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், வாதிகளும் ஒரே சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கும், 2ம் பிரதிவாதி செந்தில்குமாருக்கும் காமாட்சி அம்மன் கோவில் தான் குலதெய்வம் என்று சொன்னால் சரிதான். என்னுடைய குலதெய்வம் உப்பிலியபுரத்தில் நான் குடியிருக்கும் தெருவில் தென்புறத்தில் உள்ளது. வாதிகளுக்கும் மற்றும் அவருடைய பங்காளிகளுக்கும் மட்டும் இந்த மாசிமலையான் கோவில் குலதெய்வம் என்று சொன்னால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டை கிரையம் பெறும் போது தாவா சொத்திலிருந்த அரசமரம் தற்போது இல்லை என்றால் சரிதான். நான் குடியிருக்கும் தெரு வழியாக இறந்த பிணங்களை அடக்கம் செய்ய எடுத்து செல்லும் போது என் வீட்டுக்கு அருகாமையில் செல்லும் போது மேலங்கள் அடிக்க மாட்டார்கள் என்பது வழக்கம் என்று சொன்னால் தற்போது கொஞ்ச நாட்களாக அடிப்பது கிடையாது, அதற்கு முன் அடிப்பார்கள்.

வாதியின் வழக்கு விவரம் தெரியுமா என்றால் தாவா இடத்தில் புழங்க கூடாது என்பதற்காக தாக்கல் செய்துள்ளார்.

நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளவாறு வாதி பிரதிநிதித்துவ அடிப்படையில் அனுமதி பெறாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் வாதி IA.No.514/2016 நீதிமன்ற உத்தரவுபடி முறையாக ஊரில் தண்டோரா போட்டும், செய்திதாளில் அறிவிப்பு பிரசுரம் செய்தும், அறிவிப்பு செய்த பிறகு தான் முறையாக அனுமதி பெற்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நான் அனுபவம் செய்யவில்லை என்றாலும், ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் சரிதான்.

வாதிகள் CMA 03/2017 என்ற வழக்கில் சமூகம் துறையூர் சார்பு நீதிமன்றத்தில் இடைக்கால உத்தரவு பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நானும், எனது குடும்பத்தாரும் எந்தவிதமான இடையூறும் செய்யக்கூடாது என சமூகம் துறையூர் சார்பு நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும், அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்

மனைவியின் பெயர் அஞ்சலை. சமூகம் துறையூர் சார்பு நீதிமன்றத்தில் இடைக்கால தடையுத்தரவு அமலில் இருக்கும் போதே நானும், என் மனைவி அஞ்சலை மற்ற பிரதிவாதிகள் மூவரும் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இருசக்கர வாகனங்களை நிறுத்தியும், கீற்றுகொட்டகை அமைத்தும் தடையுத்தரவு மீறினோம் என்று சொன்னால் உத்தரவு கிடைத்தவுடன் அன்றைய தினமே நாங்கள் தாவா சொத்திலிருந்து காலிசெய்து விட்டோம். உத்தரவிற்கு பிறகு தாவா சொத்தில் நாங்கள் இருந்தோம், வாதிகள் காவல் துறையில் புகார் அளித்து காவல் துறையினர் வந்தபிறகு தான் தாவா சொத்திலிருந்து காலிசெய்தோம் என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் சொல்வதற்கு முன்போ காலிசெய்தோம்.

தாவா சொத்திற்கான வருவாய்துறை ஆவணங்களில் கோவில் பெயரை சேர்ப்பதற்காக தான் வாதிகள் முயற்சி செய்தார்கள், அவருடைய பெயரை சேர்ப்பதற்காக அல்ல என்று சொன்னால் சரிதான். வாதிகள் தாவா சொத்தில் பட்டா வாங்க முயற்சி செய்ததாகவும், அதை தடுப்பதற்காக 3 ம் பிரதிவாதி அசோக்குமார் மனு கொடுத்ததாக என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் அது தவறு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு 3 ம் பிரதிவாதி அசோக்குமார் மனு கொடுத்திருந்தால் அந்த மனுவை

ஆவணமாக இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வருவாய்துறை ஆவணங்களில் காலிமனை என கண்டுள்ளதால் தாவா சொத்தில் கோவில் இல்லை என சொல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல, சாமி இல்லை, கோவில் இல்லை, சுவர் இல்லை. தாவா இடத்தில் பலவிதமான பூஜைகள் நடைபெற்றுக்கொண்டு தான் வருகிறது, தாவா வழக்கிற்காக பொய் சொல்கின்றேன் என்று சொன்னால் தாவா இடத்தில் 2, 3 ஆண்டுளாக பூஜை நடைபெற்று வருகிறது. தாவா இடத்தில் சுமார் 90 ஆண்டுகளாக வாதிகளும், அவருடைய பங்காளிகளும், முன்னோர்களும் பொங்கல் வைத்து, கெடா வெட்டி, சாமி கும்பிட்டு வருகிறார்கள் என்று சொன்னால் முன்பெல்லாம் கிடையாது, ஆனால் 3 ஆண்டுகளாக செய்து கொண்டு வருகிறார்கள். வாதிகள் 90 ஆண்டுகளாக பூஜை செய்து அனுபவம் செய்து வருகிறார்கள், வாதிகளுக்கு அனுபவம் பாத்தியமும், உரிமை பாத்தியமும் பாத்தியம் உண்டு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் தற்போது வாதிகள் சாமி கும்பிட்டு கொண்டு இருக்கிறார்கள். வாதி தனிப்பட்ட எந்தவிதமான பரிகாரமும் கேட்காததால் அரசு அலுவலகர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை, அதன் தொடர்ச்சியாக விளம்புகை பரிகாரம் கோவில்லை என்று சொன்னால்

26.11.2025



அதெல்லாம் கிடையாது. நான் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து, இடையூறு செய்ததால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என்னை தாவா இடத்திலிருந்து காலி செய்ய சொன்னவுடன் அன்றைய தினமே காலி செய்து விட்டேன். வழக்கு வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரிதான், சாட்சி மீண்டும் அரசாங்கத்திற்கு சொந்தமான இடம் என்று கூறுகிறார்.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.